உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.665/2023

| | |
|---|---|
| பெயர் | :சேதுராமன் |
| தகப்பனார் பெயர் | :மலுவு |
| கணவர் பெயர் | : |
| வயது | :45 |
| கிராமம் | :அரும்பனூர் |
| வட்டம் | :ஒத்தக்கடை |
| தொழில் | :வேலையில்லை |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.12.2024

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 26.06.2017 அன்று மாலை சுமார் 4.00 மணியளவில் என் தம்பி மனைவி பொன்முடி என்ற கரந்தேஸ்வரி என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஆஜர் 3வது எதிரி கணேசன் என்பவர் தண்ணி போட்டுவிட்டு என் தம்பி சுரேசிடம் தகராறு செய்வதாக என்னிடம் தெரிவித்தார். நான் தகவல் வந்த போது நரசிங்கம் பெருமாள் கோவிலில் இருந்தேன். தகவல் கிடைத்தவுடன் அரும்பனூரில் உள்ள என்னுடைய வீட்டிற்கு சென்றேன். அப்போது எங்கள் ஊர் மந்தையில் ஒரே கூட்டமாக நின்றார்கள். மந்தை அருகே உள்ள வீட்டில் விசேஷம் நடந்தது. நான் சென்று சண்டையை விலக்கிவிட்டேன். அதன்பிறகு மீண்டும் மாலை 6.00 மணியளவில் மீண்டும் தண்ணியை போட்டுவிட்டு, ஆஜர் 3வது எதிரி கணேசன் கத்திக்கொண்டிருந்தார். கணேசன் உறவினர்களும் சேர்ந்து என்னையும், என் தம்பியையும் அவதூறாக பேசினார்கள். கூட்டத்திலிருந்து எங்கள் மீது

கற்களைகொண்டு எறிந்தார்கள். அதில் வலது காலில் காயம் ஏற்பட்டது. இருட்டாக இருந்ததால் யார் எறிந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. உடனே நான் தல்லாகுளம் ஜெயம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுவிட்டேன். நான் சிகிச்சையில் இருந்த போது, ஒத்தக்கடை காவல்நிலையத்தார் என்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள். சாட்சியிடம் மேற்படி புகார் வாக்குமூலம் காட்டப்பட்டு சாட்சி அது தான் கொடுத்தது தான் என்று ஒப்புக்கொள்ளவே மேற்படி ஆவணம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இருட்டாக இருந்ததால் எனக்கு நடந்தவை ஒன்றும் தெரியவில்லை. ஆஜர் எதிரிகள் அனைவரும் சம்பவ இடத்தில் தான் இருந்தார்கள். காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் கொடுத்த புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1லோ, அல்லது காவல்துறை விசாரணையிலோல என் தம்பி மனைவி எனக்கு தொலைபேசியில் மாலை சுமார் 4.00 மணியளவில் தகவல் கொடுத்த விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அப்போது மயக்கநிலையில் இருந்தேன். காவலர்கள் என்னிடம் வாக்குமூலம் பெற்ற போது நான் மயக்கநிலையில் இருந்தேனா என்றால்ஆமாம். நான் கூறிய விபரங்கள் தான் காவலர்கள் எழுதிய புகார்வாக்குமூலத்தில் இருக்கிறது என்பது பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் இருந்த விபரத்தை காவலர்கள் என்னிடம் படித்து காட்டி கையெழுத்து பெற்றார்களா என்றால் மயக்கநிலையில் இருந்ததால் இல்லை. காவலர்கள் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்ற போதோ, அல்லது விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யும் போதோ ஆஜர் 3 வது எதிரியான கணேசன் தண்ணியை போட்டுவிட்டு தகராறு செய்த விபரத்தை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. புகார்

வாக்குமூலத்திலோ, அல்லது காவல்துறை விசாரணையிலோ சம்பவமானது அரும்பனூர் மந்தையில் வைத்து நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்திலோ, அல்லது காவல்துறை விசாரணை வாக்குமூலத்திலோ கல்லை கொண்டு எறிந்ததால் மட்டுமே காலில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, அடிபட்டதாக தெரிவித்துள்ளேன். கணேசன் ஆஜர் எதிரியுடைய வீட்டிற்கும், கண்ணாமணியுடைய வீட்டிற்கும் இடையே சுமார் 50 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். கண்ணாமணி, ஆஜர் 3 வது எதிரி கணேசனின் மனைவியை அவதூறாக பேசிய வகையில் எதிர்புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் ஒரு எதிரி என்றால் சரிதான். மேற்படி கண்ணாமணி கணேசனின் மனைவியை அவதூறாக பேசியது தொடர்பாக நடந்த சம்பவமானது கணேசன் வீட்டிற்கும், மந்தைக்கும் நடுவில் நடந்தது. நான் சொல்வது போல் 26.06.2017 அன்று கணேசன் எங்கள் மீது அவதூறாக பேசியது தவறு என்றும், நாங்கள் தான் இரவு 7.00 மணியளவில் சென்று கணேசன் வீட்டிற்கு சென்று அவரையும் அவரது மனைவியையும் அவரது உறவினரையும் அவதூறாக பேசி அடித்து காயப்படுத்தியவகையில் என் மீதும், கண்ணாமணி மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதில் இருந்து தப்பித்துகொள்வதற்காக எண்ணி ஆஜர் எதிரிகள் மீது பொய் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக கூறி பொய்புகார் கொடுத்ததால் தான் புகார் வாக்குமூலத்திலோ, அல்லது காவல்துறை விசாரணை வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் முன்னுக்குபின் முரணாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் கூறுவது போல எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும்,. ஆஜர் எதிரிகள் மீது காழ்புணர்ச்சி கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு காலில் காயம் ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றும், நானே காயத்தை ஏற்படுத்திகொண்டு கல்லால் அடித்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.12.20 20:44:08 +0530

Assistant Sessions Judge
Melur